**அனுப்புநர்**

சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்.

**ந.க.எண். 003610/எச்.1/2022** **நாள் : 16.06.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – 2021–2022 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு மற்றும் இடைநிலைப் பொதுத் தேர்வுகள் – மே 2022, தேர்வு முடிவுகள் – அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) – அனைத்துப் பள்ளிகளும் ஆன்–லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** அரசாணை (நிலை) எண். 14, நாள். 29.01.2018.

-----

2021–2022ஆம் கல்வியாண்டில் இடைநிலை / மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களின் பொதுத் தேர்வு முடிவுகள் வருகிற **20.06.2022 (திங்கட்கிழமை) அன்று காலை 9.30 மணிக்கும், இடைநிலை பொதுத் தேர்வெழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் நண்பகல் 12.00 மணிக்கும்** வெளியிடப்படவுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களும் **20.06.2022 அன்று** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்கள் பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User–ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, மேல்நிலை இரண்டாம் ஆண்டு வகுப்பு மாணவர்களுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை **முற்பகல் 9.45 மணி முதல் 11.45 மணி வரையிலும்,** பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) **நண்பகல் 12.15 மணி முதல் பிற்பகல் 2.15 மணி வரையிலும்** பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்துமாறும், அதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க பள்ளித் தலைமையாசிரியர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்டவாறு பள்ளி மாணவர்களுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை மேலே குறிப்பிட்ட நேரத்தில் பதிவிறக்கம் செய்ய தவறிய பள்ளி தலைமை ஆசிரியர்கள் பிற்பகல் 3.00 மணி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ஒம்./–**
**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை – 600 006
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.